**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.149/2020**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தங்கபாண்டி | **Caste** | : |
| **Father's Name** | : முனியப்பன் | **Calling** | : சொந்த தொழில் |
| **Village** | : எரமநாயக்கன்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 44 |
| | | **Dated** | : 27.05.2025 |

**27.05.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு. **தங்கபாண்டி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,2ம் எதிரி ஆஜர்.**
**3ம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**
**4ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளார்.**
நான் தற்போது எரமநாயக்கன்பட்டியில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது HDFC Micro Finance–ல் பீல்டு ஆபிசராக வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளான காட்டுராஜடா மற்றும் திலிப்குமாரை தெரியும். எதிரி நித்யாநந்தாவை தெரியும். எதிரி பாண்டிசெல்வனை தெரியும். ஆஜர் எதிரி திலிப்குமார் மற்றும் எதிரி நித்யாநத் ஆகியோர்கள் காட்டுராஜா வின் மகன்கள். பாண்டிசெல்வன் RM காலனி பகுதியை சேர்ந்தவர். எங்களுக்கு எரமநாயக்கன்பட்டியில் சொந்தமாக வீடு உள்ளது. RVS கல்லூரி பஸ் ஸ்டாப் அருகே புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த புறம்போக்கு நிலத்தில் எதிரி காட்டுராஜா கடந்த 20 வருடங்களாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அந்த இடத்தில் எனது

அம்மாவும் அப்பாவும் கடந்த 15 வருடங்களாக டீ கடை வைத்துள்ளார்கள். மேற்படி சூல்நிலையில் எனது அம்மா மற்றும் அப்பாவை எதிரி காட்டுராஜா மது அருந்திவிட்டு அந்த டீ கடையை காலி செய்ய சொல்லி அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். கடந்த 13.10.2019ம் தேதி ஞாயிற்றுக் கிழமை அன்று மாலை 04.30 மணிக்கு நான் எனது அப்பா அம்மாவை பார்ப்பதற்காக டீ கடைக்கு சென்றேன். அப்போது நான் எங்கள் கடையில் டீ சாப்பிட்டுக் கொண்டு இருந்தபோது எதிரி நித்யாநத், எதிரி பாண்டிசெல்வன், எதிரி திலிப்குமார், எதிரி காட்டுராஜா ஆகியோர்கள் வந்தார்கள். அப்போது எதிரி நித்யாநத் வந்த உடன் எனது வலது கண்ணத்தில் கையால் அடித்து தேவிடியா மகனே என மாறி மாறி கெட்ட வார்த்தையால் பேசி இங்கு வந்து கடை வைப்பியாடா என சொல்லி அடித்தார். எதிரி பாண்டிசெல்வன், திலிப்குமார் ஆகியோர்கள் கையால் மாறி மாறி எனது உடலில் அடித்தார்கள். எதிரி நித்யாநத் நாற்காலியால் என்னை அடிக்க வந்தபோது நான் எனது கையால் தடுத்தேன். அப்போது எனது இடது கை சுண்டு விரலில் பலத்த காயம் பட்டது. பின் கேஸ் அடுப்பில் இருந்த கம்பியை எடுத்து எதிரி நித்யாநத் எனது இடது பக்க பின் தலையில் அடித்ததில் எனக்கு இடது பக்க பின் தலையில் இரத்த காயம் பட்டது. இதை விளக்கி விட வந்த எனது அப்பாவையும் எதிரிகள் கையால் அடித்தார்கள். அங்கு டீ சாப்பிட வந்த தேவேந்திரன் இந்த சண்டையை விலக்கிவிட முயற்சி செய்தார். பின் எதிரிகள் 4 நபர்களும் இந்த டீ கடையை காலி செய்ய வில்லை என்றால் குடும்பத்தையே கொன்றுவிடுவோம் என மிரட்டிவிட்டு சென்றார்கள். பின் நான் மயங்கி விழுந்துவிட்டேன். பின் அங்கிருந்தவர்கள் தண்ணீர் தெளித்துவிட்டவுடன் எழுந்தேன். பின் எனது இருசக்கர வாகனத்தில் நானும் எனது மனைவியும் தாலுகா காவல் நிலையம் சென்றோம். அங்கிருந்த போலிசார் எனக்கு அதிக ரத்தப்போக்கு இருந்ததால் என்னை மருத்துவமனைக்கு செல்லசொன்னதன் பேரில் நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தலையில் 7 தையல் போடப்பட்டது. எனக்கு எதிரி நித்யாநத் நாற்காலியால் அடித்த காயத்திற்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று இடது கை சுண்டு விரலின் ஒரு சிறு பகுதியை வெட்டி அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் 13ம் தேதி மயக்க நிலையில் இருந்ததால் அன்று புகார் அளிக்க முடியவில்லை. நான் சிகிச்சையில் இருந்தபோது இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க போலிசார் நான் சொல்ல சொல்ல போலிசார் புகார் வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள். புகார் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் போட்டுக் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது

தான்.( **புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** என்னிடம் காட்டப்படும் கேஸ் அடுப்பின் மீது உள்ள கம்பியால் தான் எதிரி நித்யாநந் எனது இடது பக்க தலையில் அடித்தார். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை–இல்லை</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.149/2020**

**Prosecution Witness : 2**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : முனியப்பன் | **Caste** | : | |
| **Father's Name** | : அம்மாவாசி | **Calling** | : | டீ கடை |
| **Village** | : எரமநாயக்கன்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | **65** |
| | | **Dated** | : | **27.05.2025** |

**27.05.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு.முனியப்பன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,2ம் எதிரி ஆஜர்.**
**3ம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**
**4ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளார்.**
நான் தற்போது எரமநாயக்கன்பட்டியில் குடியிருந்து டீ கடை வைத்துள்ளேன். அசா1 தங்கபாண்டி எனது மகன். ஆஜர் எதிரிகளான காட்டுராஜடா மற்றும் திலிப்குமாரை தெரியும். எதிரி நித்யாநந்தாவை தெரியும். எதிரி பாண்டிசெல்வனை தெரியும். ஆஜர் எதிரி திலிப்குமார் மற்றும் எதிரி நித்யாநத் ஆகியோர்கள் காட்டுராஜா வின் மகன்கள். எதிரி பாண்டிசெல்வனை சம்பவத்தின்போது பார்த்துள்ளேன்.எங்களுக்கு எரமநாயக்கன்பட்டியில் சொந்தமாக வீடு உள்ளது. RVS கல்லூரி பஸ் ஸ்டாப் அருகே புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த இடத்தில் நான் கடந்த 10 வருடங்களாக டீ கடை வைத்துள்ளேன். நான் அங்கு கடை வைப்பதற்கு முன்பு இருந்து எதிரி காட்டுராஜா அங்கு குடும்பத்துடன் குடியிருந்து

வருகிறார். சுமார் தேதி எனக்கு ஞாபகமில்லை சுமார் இரண்டு வருடத்திற்கு மேல் இருக்கும் . எனது கடையில் வைத்து எதிரிகள் எனது மகன் தங்கபாண்டியை அடித்துக் கொண்டிருந்தார்கள். பின் அவர்களை விலக்கிவிடுவதற்காக சென்றேன். அவர்கள் என்னையையும் கையால் அடித்தார்கள். எனது மகனை எதிரி நித்யாநத் என்னிடம் காட்டப்படும் கேஸ் அடுப்பில் உள்ள இரும்பு ஸ்டாண்டை எடுத்து தலையில் அடித்து விட்டார். எதிரி நாற்காலியால் எனது மகனை அடித்தார். இதில் எனது மகனில் இடது கை சுண்டு விரல் கட்டாகி விட்டது. கேஸ் அடுப்பில் உள்ள இரும்பு ஸ்டாண்டால் அடித்ததில் இடது பக்க பின் தலையில் காயம் பட்டது. எனக்கு லேசான காயம் என்பதால் எனக்கு சிகிச்சை அளித்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். எனது மகன் மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை எடுத்துக் கொண்டார். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை—இல்லை</u>

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No.149/2020**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தெய்வேந்திரன் | **Caste** | : | |
| **Father's Name** | : | பாண்டி | **Calling** | : | சென்ரிங் வேலை |
| **Village** | : | எரமநாயக்கன்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **27.05.2025** |

**27.05.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 5 திரு.தெய்வேந்திரன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1,2ம் எதிரி ஆஜர்.**
**3ம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**
**4ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டுள்ளார்.**
நான் தற்போது எரமநாயக்கன்பட்டியில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன்.. அசா1 தங்கபாண்டி எனக்கு தம்பி முறை. ஆஜர் எதிரிகளான காட்டுராஜடா மற்றும் திலிப்குமாரை தெரியும். எதிரி நித்யாநந்தாவை தெரியும். எதிரி பாண்டிசெல்வனை தெரியும். ஆஜர் எதிரி திலிப்குமார் மற்றும் எதிரி நித்யாநத் ஆகியோர்கள் எனது உறவினர்கள். எதிரி பாண்டிசெல்வனை தெரியாது. சுமார் 6 வருடத்திற்கு முன்பு சம்பவத்தின்போது நான் முனியப்பன் டீ கடைக்கு அருகே உள்ள டீ கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் அசா.1 தங்கபாண்டியுடன் சண்டையிட்டு கொண்டிருந்தார்கள். அசா.1 தங்கபாண்டியனுக்கு சட்டையில் ரத்த கறை பட்டிருந்தது. பின் அசா.1

தங்கபாண்டியன் மருத்துவமனைக்கு சென்றார். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பகுதி பிறழ் சாட்சியாக அனுமதி கோரப்பட்டு பகுதி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

சம்பவத்தின்போது எதிரிகள் காட்டுராஜா, திலிப்குமார், நித்யாநத் மற்றும் எதிரி பாண்டிசெல்வன், அசா1 தங்கபாண்டியனை ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும் எதிரி நித்யாநத் கேஸ் ஸ்டவ் மீது உள்ள ஸ்டாண்டை எடுத்து தங்கபாண்டியின் இடது பக்க பின் தலையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும், பின் எதிரி நாற்காலியை எடுத்து அடிக்க வந்த போது அவரது இடது பக்க கை சுண்டு விரலில் காயம் பட்டது என்றும், பின் அக்கம் பக்கத்தினர் இருந்த நானும் மற்றவர்களும் விலக்கி விட்டோம் என்றும் எதிரிகள் இந்த சண்டையை விலக்க வந்த முனியப்பனையும் கையால் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், எதிரிகள் தங்கபாண்டியனை பார்த்து கடையை காலி செய்யவில்லை என்றால் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டினார்கள் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி பாண்டிசெல்வனை தெரியாது என்றும் தங்கபாண்டியனை யார் யார் எந்த இடத்தில் அடித்தார்கள் என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை–இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ

Judicial Magistrate No.I
Dindigul.